**<u>சுருக்கம்</u>**

கைத்தறித் தொழில் – கைத்தறி நெசவாளர்களுக்கு "சிறந்த நெசவாளர்" விருது வழங்குதல் – கொள்கையளவிலான அனுமதி மற்றும் ரூ.1,00,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை**

அரசாணை(நிலை) எண். 195

நாள் 29.8.2013
விஜய ஆடி 13,
திருவள்ளுவர் ஆண்டு 2044

**<u>படிக்கப்பட்டது</u>.**

1. 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17–இல் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – அறிவிப்பு எண். 4.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க. எண்.14449/2013/ஜே1–1, நாள் 23.05.2013 மற்றும் 23.7.2013.

---

**<u>ஆணை</u>:–**

2013–2014ஆம் ஆண்டிற்கான, கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 22.4.2013 அன்று சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பில், அறிவிப்பு எண்.4–இல் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

> "கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்படும் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் விதமாக, அதிக உற்பத்தியும், விற்பனையும் பெற்றுத் தந்த, சிறந்த நெசவாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழக அரசினால் "சிறந்த நெசவாளர்" என்று தேர்வு செய்து ரூ.1,00,000/– ரொக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்".

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பினை நிறைவு செய்யும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் சிறந்த நெசவாளர்களை தேர்வு செய்து பரிசு வழங்க ஏதுவாக கொள்கை அளவிலான ஆணையினையும், இத்திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில் ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.1.00 இலட்சம் நிதியினை ஒப்பளிப்பு செய்யும் ஆணையினையும் வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, ஒவ்வொரு வருடமும் சிறந்த நெசவாளர்களை தேர்வு செய்து பரிசு வழங்க கொள்கை அளவிலான அனுமதியும், இத்திட்டத்தினை செயல்படுத்திடும்

/ த.பி.பா /

வகையில் ஒவ்வொரு வருடத்திற்கும் தொடரும் செலவினமாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிதியினை ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது. மேற்காணும் சிறந்த நெசவாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான திட்ட வழிமுறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.1,00,000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"2851-00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – KX. கைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி – 59. பரிசுகளும் வெகுமதிகளும்.

(த.தொ.கு. 2851–00–103–KX – 5900)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கான நிதி, வரும் 2013–2014ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இச்செலவினத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான உரிய செயற்குறிப்பினை நிதி (தொழில்கள்) துறைக்கு தவறாமல் அனுப்புமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.45632/Ind/13, நாள் 27.08.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1039 (ஆயிரத்து முப்பத்தொன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., சென்னை – 600 008.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.

**<u>நகல்:-</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நிதித் (தொழில்கள் / வ.செ.பொது II) துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு

### சிறந்த நெசவாளரை தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள்

**(i) திட்டத்தின் நோக்கம்**

நெசவுத் தொழிலுக்கு புத்துயிரூட்டி, பழமையில் புதுமை புகுத்தி, சிறந்த வடிவமைப்பினை உருவாக்கி சிறந்த பங்களிப்பினை வழங்கி அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு நெசவாளரை தேர்ந்தெடுத்து பரிசு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

**(ii) இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நெசவாளரின் தகுதிகள்:–**

1. மிகச்சிறந்த திறமை மிகுந்த கைத்தறி நெசவாளராக இருக்க வேண்டும்.
2. நெசவாளர் சங்கத்தில் தொடர்ந்து நெசவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
3. சிறந்த வடிவமைப்புடன் கூடிய நேர்த்தியான நெசவுத் தன்மையுடன் கூடிய துணி வகையினை உற்பத்தி செய்திருக்க வேண்டும்.
4. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ரகங்கள் தங்குதடையின்றி சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்டிருக்க வேண்டும்.
5. நெசவுத் தொழிலின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

**(iii) விருதின் உள்ளடக்கம்**

தமிழகம் முழுவதிலுமிருந்து ஒரு நெசவாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1.00 இலட்சம் மட்டும் ரொக்கமாக வழங்கப்படும். இதனை தவிர பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

**(iv) விண்ணப்பிக்கும் முறை**

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் நெசவு செய்த இரகத்தின் மாதிரியை போதுமான ஆதாரத்துடன் பரிசீலனை செய்து தகுதிவாய்ந்த விண்ணப்பங்களை தெரிவு செய்ய கீழ்க்காணும் உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்படும்:–

1. சரக துணை / உதவி இயக்குநர் – தலைவர்
2. சரக தொழில்நுட்ப உதவியாளர் – உறுப்பினர்
3. இரண்டு நெசவாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் – உறுப்பினர்கள்

மேற்படி குழு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகத்திற்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் சமர்ப்பிக்கும் பணியினை மேற்கொள்ளும்.

**(v) <u>மாநில அளவில் அமைக்கப்பட உள்ள குழு</u>**

சிறந்த நெசவாளர்களை தெரிவு செய்ய ஏதுவாக மாநில அளவில் கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்ட குழு அமைக்கப்படும்:–

| | | | |
|---|---|---|---|
| 1. | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | – | தலைவர் |
| 2. | கூடுதல் இயக்குநர் | – | உறுப்பினர் |
| 3. | இணை இயக்குநர் (கைத்தறி) | – | உறுப்பினர் (கூட்டுநர்) |
| 4. | இயக்குநர், நெசவாளர் சேவா மையம் அல்லது அவரது பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 5. | மண்டல இயக்குநர், மத்திய பட்டு வாரியம், காஞ்சிபுரம் அல்லது அவரது பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 6. | இயக்குநர், தேசிய ஆடை வடிவமைப்பு மையம் அல்லது அவரது பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 7. | முதன்மை பொது மேலாளர், கோ–ஆப்டெக்ஸ் | – | உறுப்பினர் |
| 8. | கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர், காஞ்சிபுரம் | – | உறுப்பினர் |
| 9. | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் (தலைமையிடம்) | – | உறுப்பினர் |

இக்குழு பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து தகுதிவாய்ந்த நெசவாளரை தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும்.

......5.

**vi)** <u>தேர்ந்தெடுப்பதற்கான காலமுறை அளவு</u>

<u>கீழ்க்காணும் பட்டியலின் படி தேர்வு செய்யும் முறை இருக்க வேண்டும்</u>

| வ.எண். | பொருள் | கால அளவு (ஒவ்வொரு வருடத்திற்கும்) * |
|---|---|---|
| 1. | கைத்தறி மற்றும் துணிநூல் சரக துணை இயக்குநர் / உதவி இயக்குநர் சங்கங்களுக்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டிய நாள் | ஜுன் 30ஆம் தேதிக்குள் |
| 2. | நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலிருந்து விண்ணபப்பங்களை சரக துணை / உதவி இயக்குநர்கள் பெற வேண்டிய கடைசி நாள் | ஆகஸ்டு 31ஆம் தேதிக்குள் |
| 3. | சரக அளவில் உள்ள பரிசீலனை குழுவால் பரிசீலிக்கப்பட்டு இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய கடைசி நாள் | செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் |
| 4. | மாநில அளவிலான பரிசீலனை குழுவால் பரிசீலிக்கப்பட்டு சிறந்த நெசவாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நாள் | நவம்பர் 30ஆம் தேதிக்குள் |
| 5. | சிறந்த நெசவாளருக்கான விருது வழங்க வேண்டிய நாள் | டிசம்பர் 31ஆம் தேதிக்குள் |

* மேற்கண்ட கால அட்டவணை தேவைக்கேற்ப மாறுதல் செய்யப்படும்.

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்